## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 313/2023 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | மகேஸ்வரி |
| Husband Name | : | வேலுச்சாமி |
| Village | : | திருப்பூர் |
| Taluk | : | திருப்பூர் |
| Age | : | 29 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது அப்பா ஆவார். என்னுடன் பிறந்தது சத்தியா, புவனேஷ்வரி என்ற இரு தங்கை உள்ளார்கள். கடந்த 10 ஆண்டுகளாக எனது அப்பா எந்த வேலைக்கும் செல்லாமல் அவரது நண்பர்களுடன் சுத்தி வந்தார். மூத்த பொண்ணான நான்தான் வேலைக்குச்சென்று குடும்பத்திற்கு தேவையானவற்றை பார்த்து வந்தேன். இருப்பினும் எனது அப்பா குடித்துவிட்டு வந்து எனது அம்மா, எனது தங்கைகள் இருவரையும் தகாத வார்த்தைகளால் பேசி அடித்து தகராறு செய்வார். பின்னர் திருமணத்திற்கு பின்பு திருப்பூரில் குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறேன். கடந்த 28.11.2023 ஆம் தேதியன்று மதியம் சுமார் 1.00 மணியளவில் எனது அம்மா எனக்கு போன் செய்து எனது அம்மாவை பார்த்து கண்டாரோழி, தேவடியா போன்ற இன்னும் சொல்லமுடியாத அளவுக்கு தகாத வார்த்தைகளால் பேசியதா சொல்லி எனது அம்மாவை அடித்ததாகவும், மேலும் அரிவாளை எடுத்துக்கொண்டு கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி வெட்ட வந்ததாகவும், எனது அம்மா எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். பின்னர் தகவல் தெரிந்து நானும், எனது கணவரும் மாலை சுமார் 4.00 மணியளவில் வீட்டிற்கு வந்தோம். பின்னர் அம்மாவிடம் என்ன என்று கேட்டபோது அம்மாவை மேற்சொன்னவாறு தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், அரிவாளை எடுத்துக்கொண்டு வந்து வெட்ட முயற்சி செய்ததாகவும் சொன்னார். அதனால் நாங்கள்

பயந்துகொண்டு அவர் மீது ஊதியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் புகார் கொடுக்க போகவில்லை என்றால் சரியல்ல. சென்றேன். யார்யார் புகார் கொடுக்க சென்றோம் என்றால் நானும் எனது நண்பரும், எனது தங்கை மற்றும் அவரது நண்பர் ஆகியோர் சென்றோம். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அம்மா சொல்லித்தான் என்ன நடந்தது என்று தெரியும் என்றால் சரிதான். எனது அம்மா இருப்பது எனது தாத்தாவின் வீடு என்றால் சரிதான். எனது அப்பா ஆடு, மாடுகளை வைத்திருந்தாரா என்றால் இல்லை. எனது தாத்தாவிற்கு காடு இருந்தது என்றால் சரிதான். எனது அம்மாதான் ஆடு மாடுகளை வாங்கி வளர்த்து வந்தார். எனது அப்பாதான் ஆடு, மாடுகளை வளர்த்து என்னை படிக்கவைத்து வந்தார் என்றால் சரியல்ல. நான் எனது அம்மா வீட்டில் ரொம்ப நாட்கள் இருப்பேன் என்றால் சரியல்ல. அந்த சமயம் எனது அப்பாவிடம் நான் பேசமாட்டேன் என்றால் அவர் என்னுடன் பேச மாட்டார். சம்பவத்திற்கு பின்னர் அப்பா எங்கு தங்கியுள்ளார் என்றால் இரண்டு வீடுகள் ஒட்டி ஒட்டி உள்ளது. அதில் ஒரு வீட்டில் உள்ளார். அப்பாவிற்கு சாப்பாடு அவர் செய்து கொள்வார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அப்பாவிற்கு சாப்பாடு போடுவதில்லை என்றால் சரியல்ல. தாத்தாவிற்கு காடு உள்ளது. நாங்கள் யாரும் தாத்தாவை போய் பார்ப்பதோ கவனிப்பதோ இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் எனது அப்பா மற்றும் எனது தாத்தாவை பார்த்துக்கொள்வதில்லை என்றும் அதனால்தான் எனது அப்பாவிற்கும் எனது அம்மாவிற்கும் பிரச்சனை வருகிறது என்றும் நாங்கள் அதை பயன்படுத்தி பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. அவர் பிரச்சனை செய்வதால்தான் நாங்கள் சாப்பாடு போடுவதில்லை. நாங்கள் சாப்பாடு போடுவதில்லை என்பதால்தான் அவர் பஸ்டேண்டு, கடை போன்ற இடங்களில் படுத்து தூங்கிக்கொண்டு வருகிறார் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டில்தான் தூங்குவார். சம்பவம் நடந்து எப்போது புகார் கொடுத்தோம் என்றால் மறுநாள் புகார் கொடுத்தோம்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.17 18:28:53 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 313/2023 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | திவாகர் |
| Father Name | : | சென்னியப்பன் |
| Village | : | ஊதியூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 26 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது ஊதியூர், சமத்துவபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 29.11.2023 ஆம் தேதியன்று போலீசார் காலை 8.30 மணியளவில் எனது மாமனார் அரிவாளை எடுத்துக்கொண்டு எனது மாமியாரை வெட்டுவது சம்பந்தமான அடிதடி வழக்கு சம்பந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் மனோகர் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேலும் அன்றைய தினம் காலை சுமார் 11.00 மணியளவில் சம்பவ இடத்தின் அருகே இருந்த புதருக்குள் இருந்து போலீசார் வழக்கு சொத்தான அரிவாள் ஒன்றை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் அரிவாள்தான் எனது மாமனார் மாமியாரை வெட்டுவதாக சொல்லி பயன்படுத்திய அரிவாள் ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **சம்பவத்தின்போது பயன்படுத்திய அரிவாள் சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

ஆஜர் எதிரி எனது மாமனார் என்றால் சரிதான். நான் எங்கு குடியுள்ளேன் என்றால் தற்போது சமத்துவபுரத்தில் குடியிருந்து வருகிறேன். பட்டியல் சாட்சி மனோகரன் எனது உறவினர் என்றால் சரிதான். திருமணம் நடந்த பின்னர் மாமனார் வீட்டிற்கு வரக்கூடாது என்று சொன்னால் போககூடாது என்றால் சரிதான். எனது மாமனார் என்னை பலமுறை வீட்டிற்கு வரக்கூடாது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வீட்டிற்கு வரக்கூடாது என்று எனது மாமனார் கூறியதனால் அவர் மீது பொய் புகார் தயார் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது மாமனார் அரிவாளை எடுத்து வெட்ட வரவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து பின்யோசனையின் பெயரில் பொய் வழக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.17 18:29:04 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்